**தலைப்பு 251 – விலை மதிப்பீட்டுத் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 204 ஜுன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களினால் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்களை தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் பிரதான அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவுத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**2 நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிலுவை வருமானங்களை இனங்காணுவது மற்றும் ஆவணப்படுத்த போதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்படாததால் ஆண்டினுள் பிழைகளைத் திருத்துவதற்காக ரூபா 25,473,709 குறைப்பு மற்றும் ரூபா 7,463,331 சேர்ப்பும் ஊடாக ரூபா 18,010,373 ஆன தேறிய நிலுவை வருமானம் குறைக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது | நிலுவை வருமானங்களை இனங்காணுவது மற்றும் ஆவணப்படுத்துவது முற்றிலும் கைமுறையாக செய்யப்படுகின்றமை, மாகாண அலுவலகங்களில் இருந்து தகவல்கள் உரிய காலத்திற்கு பிரதான அலுவலகத்திற்கு கிடைக்காமை, மாகாண அலுவலகங்கள் இது தொடர்பாக போதிய கவனம் செலுத்தாமல் செயற்படுதல் மற்றும் கட்டண அழைப்பித்தல் நிலுவை வருமான கணக்கிற்கு உட்படுத்திய பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் வேண்டுகோளின் பிரகாரம் மற்றும் நிதி அமைச்சின் அங்கீகாரம் மீது கட்டண திருத்தங்கள் மேற்கொள்வது இந்த நிலைமைக்கு காரணமாகவுள்ளது<br><br>இந்நிலையை தவிர்க்கும் வகையில், இ- மதிப்பீடு முறையில் கணக்கு நடவடிக்கைகள் தானாக நாளாதுவரையாகும் மொடியுல் ஒன்றை தயாரிப்பதற்கு கோரப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்களை இனங்கணுவது மற்றும் ஆவணப்படுத்துவதற்காக போதுமான உள்ளக கட்டுப்பாட்டு முறைகள அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைத் மதிப்பீட்டு வருமான காலப் பகுப்பாய்வின் பிரகாரம் மொத்த நிலுவை வருமானமான ரூபா 898,574,829 இன் ரூபா 676,792,851 அதாவது 75% வீதம் 01 முதல் 15 வருடங்களாக முன் கொண்டு | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகிறேன்.<br>அமைச்சின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்டு இந்த காலாவதியான மீதிகள் தொடர்பாக மேலும் எடுக்க முடியுமான நடவடிக்கைகள் தொடர்பாக விசாரித்தறிந்து அவற்றை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைத் வருமானத்தை அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரப்படும் 423 மதிப்பீட்டுக் கோவைகள் தொடர்பாக அறவிடவேண்டிய நிலுவை மதிப்பீட்டு கட்டணம் எனவும் மொத்த நிலுவை மதிப்பீட்டு வருமானத்தில் 70% வீதம் 08 நிறுவனங்களுக்கு உரியதானது எனவும் அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டிற்காக அறவிடப்படும் கட்டணம் மிகஅதிகமாக இருப்பது, மதிப்பீட்டுக் கோரிக்கை முதல் மதிப்பீடு வரை செலவாகும் காலப்பகுதியில் ஆதனங்களை அகற்றுவது, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தேவைகளில் மாற்றம் போன்றவைகள் மீது இந் நிலைமை ஏற்படுவதும், முறையான ஒப்பந்தம் இல்லாததால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதமை இந்த நிலைமைக்கு தாக்கம் செலுத்தியுள்ளதாக, இனங்கண்டதால் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சின் மூலம் கட்டணம் அறவிடும் முறையை திருத்தி ஒழுங்கான முறைமையொன்றை 2023 ஜுன் 01 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. நிதி அமைச்சின் மூலம் வழங்கும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தற்போது கணக்கில் காணப்படும் நிலுவை கட்டணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைத் மதிப்பீட்டு வருமானமான ரூபா 719,500,478 இன் பிழைகளைத் திருத்துதல் மற்றும் நிதி அமைச்சின் அங்கீகாரத்தின் கீழ் குறைத்தல் செம்மையாக்கியதன் பின்னர் மீதியான ரூபா 699,232,135 இலிருந்து 2023 ஆண்டினுள் ரூபா 22,439,284 அதாவது 3% மாத்திரம் அறவிடப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் நிலுவை மதிப்பீட்டு வருமானம் அறவிடலை செயற்திறனாக மேற்கொள்ளவில்லை என அவதானிக்கப்பட்டது. | சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் அறிவுருத்தல், நினைவூட்டல்களை மேற்கொள்ளல் மற்றும் நிறுவனங்களின் அலுவலர்களுடன் கலந்துரையாடுதல், திணைக்களத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் நிலுவை வருமான அறவிடுவது தொடர்பாக கலந்துரையாடல் மற்றும் குறித்த மாகாண அலுவலகங்களை அறிவுருத்தல், மதிப்பீட்டு அறிக்கைகளை எடுத்துச் செல்லாததால் ஏற்பட்ட நிலுவை வருமானம் தொடர்பாக திணைக்கள சட்ட பிரிவினால் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சினால் அந்த நிறுவனங்களுக்கு தெரிவித்து தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றவைகளை நிலுவை வருமானங்களை திரட்ட மேற்கொள்ளப்படுகிறது.<br><br>இம் மீதிகளில் அநேகமானவை மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படாதவைகள் ஆவதுடன் பல்வேறு காரணங்களால் குறித்த நிறுவனங்கள் மூலம் மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படவில்லை. இந்த நிறுவனங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளாக உள்ளதனை கருத்திற் கொண்டு நிதி அமைச்சின் அறிவுறுத்தல்களின் அறிவுரை பிரகாரம் முன்நடடிவக்கை மேற்கொள்ளப்படும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) மற்றும் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (SLRDC) தொடர்பாக 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு நடவடிக்கைக்காக அறவிட வேண்டிய நிலுவை மதிப்பீட்டு வருமானம் முறையே ரூபா 171,814,919 மற்றும் ரூபா 9,547,400 இனை உரிய நேரத்தில் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.. | நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துடன் சம்பந்தப்பட்ட மதிப்பீட்டுக் கோகைகள் தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தில் பிரதான அலுவலகத்தின் தனிப் பிரிவிவொன்றின் மூலம் செயற்படுத்தப்பட்டுள்ளதால் இந்த தகவல்கள் மாகாண அலுவலகங்களில் இருந்து பெற்றுக் கொள்வது சிரமமாக உள்ளதால் குறித்த நிறுவனங்களிற்கு பிரதான அலுவலகத்தின் தகவல்களை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக இந்த கோவைகள் தொடர்பான முன்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | முறையாக ஆவணங்களை இற்றைப்படுத்தி நடாத்தி செல்வதற்கும் வருமானத்தை உரிய நேரத்தில் சேகரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2023 நவம்பர் 15 ஆரம்பிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கில் 2023 திசெம்பர் 31 இல் ரூபா 35,726,901 ஆன மதிப்பீட்டு வருமானம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதும் ரூபா 3,076,174 ஆன மதிப்பீட்டு வருமானத்திற்கு உரிய நிறுவனங்களை இனங்கண்டு பற்றுச் சீட்டுக்களை வழங்கியிருக்கவில்லை. | மதிப்பீட்டு வருமானங்களை சேகரிக்க மாத்திரமே பயன்படுத்தும் கணககொன்றாக 2023 நவம்பர் 15 திகதி ஆரம்பிக்கப்பட்ட மக்கள் வங்கியின் இலக்கம் 236-100-49026095 கொண்ட கணக்கிற்கு கிடைக்கும் வருமானம் தினந்தோரும் திறைசேரியினால் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் மாதாந்தம் அனைத்து வருமானங்களும் மதிப்பீட்டு வருமானமாக திறைசேரிக்கு CIGAS மென்பொருள் மூலம் கணக்கீடு செய்யப்படும். இனங்காண முடியுமான வைப்புக்களிற்காக பற்றுச் சீட்டுகள் வழங்கப்படுவதுடன் அவை மதிப்பீட்டு வருமானமாக எமது வருமான பேரேடுகளில் கணக்கீடு செய்யப்படுகின்றது. எனினும் அந்த மாதத்திளேயே இனங்கான முடியாத வைப்பு விபரங்கள் email மற்றும் whatsapp மூலம் பல்வேறு மாகாண அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு விரைவில் துரிதமாக இனங்காண நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பிடப்பட்ட வருமானங்களை சரியாகவும் விரைவாகவும் இனங்கண்டு பற்றுச் சீட்டுக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மதிப்பீட்டிற்குரிய நிறுவனங்களை இனங்காண முடியாத 04 கோவைகள் தொடர்பாக ரூபா 478,320 மற்றும் கோவை இலக்கத்தை குறிப்பிடப்படாத 04 மதிப்பீட்டு வருமானக் கோவைகளின் மொத்தம் ரூபா 365,135 ஆக கூட்டு மொத்தம் ரூபா 843,455 மதிப்பீட்டு வருமானம், நிலுவை வருமானக் கூற்றில் உள்ளடங்கப்பட்டிருந்தது. | தற்போது கண்டறிய இயலுமான பழமையான ஆவணங்களிலும் இந்த தகவல்கள் உள்ளடங்கப்படவில்லை. எவ்வாறாயினும் குறித்த மாகாண அலுவலகம் குறிப்பிடப்பட்டுள்ளதால், அவர்களிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டு முன்நடிவக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிலுவை வருமானத்திற்கான தகவல்கள் சரியாக ஆவணப்படுத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மதிப்பீட்டுக் கட்டணங்கள் அறவிட வேண்டிய மற்றும் அறவிடப்படக் கூடாத நிறுவனங்கள் தொடர்பில் திட்டவட்டமான வரைவிலக்கணம் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் அதற்குரியதாக பட்டியல் ஒன்றை பராமரிப்பதற்கு மாத்திரம் நடவடிக்கை எடுத்த காரணத்தால் மதிப்பீட்டு கட்டணம் அறவிட வேண்டிய மற்றும் அறவிட கூடாத நிறுவனங்களை வேறுபடுத்தி இனங்காணுவது பிரச்சினைக்குரியதாகவும் அதன் காரணமாக கட்டணம் அறவிடக் கூடாத 8 நிறுவனங்களிடம் இருந்து மொத்தம் ரூபா 1,625,628 ஆன கட்டணம் கோரி உள்ளதாக அவதானிக்கப்பட்டது. | இந்த நிறுவனங்கள் திட்டவட்டமானவை அல்லாததுடன் பொது முயற்சிகள் திணைக்களத்தின் வணிக மற்றும் வணிகம் சாராத நிறுவனங்களின் வகைப்படுத்தல் பிரகாரம் கட்டணம் அழைப்பித்தல் மற்றும் கட்டணம் அறவிடாமை தீர்மானிக்கப்படுகிறது. மாகாண அலுவலகங்களினால் தவறுதால உரிய கட்டணங்களை அறவிடப்பட்டுள்ளதால் நிலுவையாக காணப்பட்ட மதிப்பீட்டுக் கட்டணம் நிலுவை வருமானக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டது. | மதிப்பீட்டுக் கட்டணம் அறவிட வேண்டிய மற்றும் அறவிடக் கூடாத நிறுவனங்களை திட்டவட்டமாக இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அது குறித்து மாகாண அலுவலகங்களை யும் அறிவுருத்த வேண்டும். |
| (ஏ) | 2023 ஆம் ஆண்டிற்காக அறவிட வேண்டிய மதிப்பீட்டுக் கட்டண அட்டவணையின் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தம் ரூபா 3,812,252 ஆன 22 கோவைகளிற்குரியதாக அறவிட வேண்டிய மதிப்பீட்டு கட்டண நிலுவை வருமான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண அழைப்புகளில் ஒருசிலவை மதிப்பீட்டு முற்பணத்திற்கு உரியதாகையால் நிலுவை வருமானக் கணக்கிற்கு உள்ளடங்கப்படுவதில்லை. ஏனைய கோவைகள் தொடர்பாக மாகாண அலுவலகங்களில் இருந்து உறுதிப்படுத்தலை பெற்றுக் கொண்ட பின்னர் நிலுவை வருமானக் கணக்கில் தேவையான திருத்தங்களைச் மேற்கொள்ள குறித்துக்கொள்ளப்பட்டது. | நிலுவை வருமானத்தை திட்டவட்டமாக இனங்காண மற்றும் ஆவணப்படுத்த உரிய உள்ளக கட்டுப்பாட்டை வலுப்படுத்த வேண்டியமை. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| மின்சாரம் மற்றும் நீரிற்கான 1403 செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டிய ரூபா 1,358,635 இனை, 1409 செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பின்னர் 1403 செலவின விடயத்திற்கு நி.பி 66 மாற்றங்களின் கீழ் ரூபா 3,000,000 மேலதிக ஏற்பாடு பெற்றுக்கொண்டதன் பின்னர் 1409 செலவின விடயத்திலிருந்து ரூபா 959,634 மாத்திரம் மீண்டும் 1403 | கம்பஹா மாவட்ட செயலக வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட கம்பஹா மாகாண அலுவலகத்திற்குரிய பணம் ஆரம்ப சில மாதங்களாக மின்சாரம், நீர், பாதுகாப்பு, சுத்திகரிப்பு, மின்தூக்கி பராமரிப்பு போன்றவற்றிற்கான அனைத்து செலவினங்களும் வகைப்படுத்தப்படாது சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனவே, இந்தச் செலவுகள் | வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் மற்றும் நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 1409 செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 385,802 எஞ்சிய செலவினத்தை 1403 செலவின விடயத்தில் கணக்கீடு செய்திருப்பின் 1403 மின்சாரம் மற்றும் நீர் செலவின விடயத்தில் மிகை கொடுப்பனவு இடம்பெறுவதாக அவதானிக்கப்பட்டது. | அனைத்தும் மொத்தமாக குறிப்பிட்ட வகைப்படுத்தலிற்கு உரித்தற்ற செலவுகளை கணக்கீடு செய்ய முடியுமான 1409 ஏனைய செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்ய நேர்ந்ததாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு**

பின்வரும் மிகை செலவினங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | முற்பண பீ கணக்கின் காலப்பகுப்பாய்வின் படி ரூபா 1,443,035 ஆன அறவிட வேண்டிய கடன் மீதியில் ரூபா 356,632 அதாவது 25 சதவீதம் 5 ஆண்டுகளை விஞ்சிய கடன் மீதிகள் ஆவதுடன் இவை 1996 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் கடன் மீதிகளாகும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | கடனை அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | பணித்தடை செய்யப்பட்ட மூன்று அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய 10 ஆண்டுகளை விஞ்சிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 308,614 ஆனதுடன் இந்த கடன் மீதிகளை பிணையாளிகளிடமிருந்தேனும் அறவிடுவதற்கு இந்த அறிக்கை திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணித்தடை செய்யப்பட்ட மூன்று அலுவலர்களின் கடன் மீதிகளை அறவிடுவதற்காக அத் தகவல்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான முன் நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. | -மேற்படி- |
| (iii) | சேவையிலிருந்து விலகிச் சென்ற அலுவலர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய 5 ஆண்டுகளை விஞ்சிய கடன் மீதி ரூபா 10,818 இனை பிணையாளர்களிடம் இருந்தேனும் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடனை அறவிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்ட பின்னர் சேவையிலிருந்து விலகிச் சென்ற அலுவலர் ஒருவரின் கடன் மீதியை பதிவழிப்பதற்காக நி.பி.113 ஏற்பாட்டின் பிரகாரம் கட்டளை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான நடவடிக்கை எடுக்க செயற்பட வேண்டும். |

**2.4 வங்கி கணக்குகளின் செயற்பாடு.**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் இறுதியில் திணைக்களத்திக்கு சொந்தமாக 03 வங்கிக் கணக்குகள் இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் இணைப்பு (viii) இன் பிரகாரம் 02 கணக்குகளின் தகவல்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | இந்த கணக்கு தவறுதலாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு உரிய அனைத்து வங்கி கணக்கு தகவல்களும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் ஆண்டினுள் முடிக்கப்படாமல் எஞ்சியுள்ள பொது மதிப்பீட்டுக் கோவைகள் மற்றும் வீதவரி மதிப்பீட்டுக் கோவைகள் முறையே 9,611 மற்றும் 7,854 என அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | மதிப்பீட்டு நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள தேவையான முறைமைகளை அறிமுகப்படுத்தி செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 ஏனைய அவதானிப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வெலிகம பிரதேச சபையினால் சபை நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட மாத்தறை கம்புருகமுவ குப்பைக் காணியை அண்டியதாக அமைந்துள்ள 100.85 பர்ச்சஸ் ஆன இலக்கம் 169 கொண்ட பகுதிக்குரிய 2022 நவம்பர் 20 திகதிய மதிப்பீட்டு அறிக்கையை விநியோகிக்கும் போது மிக கிட்டிய திகதியில் அதாவது 2021 ஜூலை 26 அன்று கையொப்பமிடப்பட்டுள்ள 1375 இலக்கம் கொண்ட பயன்பாட்டு பட்டியலுடன் கூடிய தளக்கோலத்தை கவனத்திற் | காணியொன்றை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பமொன்றில் பிரச்சினையற்ற உரிமை தொடர்பாக கண்டறிதல் மதிப்பீட்டுத் திணைகளத்தின் பணிப்பொறுப்பு அல்லாததுடன் அதை கொள்வனவு செய்யும் தரப்பினர் அது தொடர்பான நிபுணத்துவ அறிவுடைய வழக்கறிஞர்களை கொண்டு மேற்கொள்ள வேண்டிய பணியாகும். அதனால் மதிப்பீட்டை அறிக்கையிடும் போது எங்களால் தெளிவான உரிமை மற்றும் வெற்று | மதிப்பீட்டு தத்துவங்களின் பிரகாரம் மதிப்பிடப்படும் ஆதனத்தின் உரிமையை உறுதி செய்யது கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளாது 2015 பெப்ரவரி 25 திகதிய 35/2015 கொண்ட பயன்பாட்டு பட்டியல் இல்லாத தளக்கோலத்தை கவனத்திற் கொண்டு காணியின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மதிப்பீட்டு தத்துவங்களின் பிரகாரம் மதிப்பிடப்படும் ஆதனத்தின் உரிமையை உறுதி செய்துகொள்ள வேண்டிய போதும் அதற்கு முரணாக செயற்பட்டதனால் இந்த மதிப்பீட்டு அறிக்கை குறித்த பிரதேச சபையின் நிதி முறைகேடொன்றிற்கு அடிப்படையாக கொண்டுள்ளதென வெளிப்படுத்தப்பட்டது. | உடமை காணப்படுகின்றது எனும் அடிப்படையில் மதிப்பீடு அறிக்கையிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கொழும்பு துறைமுக வளாகத்தினுள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கொள்கலன் முனையத்திற்குரிய 12 ஏக்கர் 02 ரூட் 29 பர்ச்சஸ் அளவான காணியை வெளிநாட்டு கம்பனியொன்றிற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக, இலங்கை துறைமுக அதிகார சபையின் மேலதிக முகாமைத்துவ பணிப்பாளரால் (தொழில்நுட்பம்) மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வருடாந்த குத்தகை வாடகை ரூபா 1,460,000,000 ஆக இருந்தது. அவ்வாறாயினும், பின்னர் வெளிநாட்டு கம்பனியால் துறைமுக அதிகாரசபையின் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை கவனத்திற்கொண்டு முதல் மதிப்பீட்டிற்காக அடிப்படையாகக் கொண்ட ஆவணத்தை மறுபரிசீலனை செய்தது முதல் மதிப்பீட்டின் ரூபா 228,000,000 இனை அதாவது 15.6% குறைவாக, ரூபா 1,232,000,000 ஆன திருத்திய மதிப்பீட்டு அறிக்கையொன்றை வெளியிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. | முதல் மதிப்பீட்டில் கருத்தில் கொள்ளப்படாத 3 விடயங்களின் அடிப்படையில் கட்டண திருத்தம் செய்யப்பட்டுள்ளது. | ஆதன மதிப்பீடு செய்யும் போது முறையான தத்துவங்கள் மற்றும் அடிப்படைகள் பின்பற்றப்பட்டு வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளவும் அரசுக்கு பாதகம் ஏற்படாத வகையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகார பதவியணியில் 380 பதவிகள் அதாவது 31 சதவீதம் வெற்றிடங்களாக காணப்படுவதாகவும், வெற்றிடங்களின் 331 அதாவது 87 சதவீதம் சிரேஷ்ட மட்டத்தில் மற்றும் மூன்றாம் மட்டத்தில் மதிப்பீட்டு கடமைகள் நிறைவேற்றும் உத்தியோகத்தர் என அவதனிக்கப்பட்டது. | சிரேஷ்ட மட்டத்திற்குரிய வெற்றிடங்கள்<br>--------------------------------------------------------<br>நிறைவேற்று உத்தியோகத்தர் பிரிவில் இலங்கை மதிப்பீட்டாளர் சேவையில் I தரம் III தர மதிப்பீட்டாளர் பதவிக்கான மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 21 வெற்றிடங்களுக்காக நேர்முகத் பரீட்சை நிறைவு செய்தமை மற்றும் திறந்த அடிப்படையில் 21 வெற்றிடங்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காகவும் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>மூன்றாம் மட்டத்திலான வெற்றிடங்கள்<br>--------------------------------------------------------<br>கள/அலுவலக அடிப்படையிலான அலுவலர் பிரிவு 2 அலுவலர் குழுவில் வகுப்பு II தரம் II உதவி மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்பதற்கு போட்டிப் பரீட்சை மூலம் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பிற்கு பதிலாக இந்த சந்தர்ப்பத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் வகையில் சேவை பிரமாணக் குறிப்பிற்கு மாற்றமாக பொது நுண்ணறிவுத் பரீட்சை மற்றும் உளர்சார்ப்பு பரீட்சை ஆகியவற்றைக் கொண்ட எழுத்து மூல பரீட்சை ஒன்றின் மூலம் ஆட்சேர்க்க பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. உத்தேச வினா பத்திரத்தின் உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பிற்காக பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகரம் கிடைத்த பின்னர் வெற்றிடங்களை விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கிறேன். | முறையான விதத்தில் செயற்பட்டு வெற்றிடங்களை நிரப்ப அல்லது பதவிகளை ஒடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இரண்டாம் மட்டம் மற்றும் ஆரம்ப மட்டத்திலான வெற்றிடங்கள்<br>--------------------------------------------------------<br>இரண்டாம் மட்டம் மற்றும் ஆரம்ப மட்டத்திலான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு பொது நிருவாக அமைச்சிற்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதென தயவுடன் தெரிவிக்கிறேன். | |
| (ஆ) | 2019 செப்டெம்பர் 27 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை மதிப்பீட்டாளர் சேவை தொடர்பான புதிய யாப்புக் கோவையின் பிரகாரம், பதவி உயர்விற்காக பூர்த்தி செய்ய வேண்டிய சேவை காலம் அதிகரித்ததால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட மட்டம் மற்றும் மூன்றாம் மட்டத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையின் 42 சதவீதமான பாரிய வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | தற்போது இத் திணைக்களத்தில் மதிப்பீட்டாளர் பதவி உள்ளிட்ட நிறைவேற்று மட்டத்திலான வெற்றிடங்கள் அதிக எண்ணிக்கை காணப்படுவது அந்த அந்த பதவிகளிற்குரியதாக பூர்த்தி செய்ய வேண்டிய சேவை காலம் உத்தியோகத்தர்களிற்கு இல்லாதமை மற்றும் தற்போது திணைகளத்தில் இருப்பது புதிய சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் பதவியேற்றம் பெற்றவர்கள் ஆகையாளாகும். | நிறுவன செயற்பாடுகளை முறையாக பேணிச் செல்ல தேவையான நடவடிக்கைகளை வழங்க பொருத்தமான மற்றும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |